# உயிர்த்துளி



08-05-1993

புனர்வாழ்வு வழங்கக் கரம் தரும் மாணவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**TRHA**

## Tamil Refugee Housing Association

2nd Floor: Millmead Business Centre, Mill Mead Road, London N17 9QU
Tel : 081 - 365 0892 / 0894

# தமிழ் அகதிகள் வீடமைப்புக் கழகத்தின் கிளை அலுவலகம் தென் இலண்டனில் பின்வரும் விலாசத்தில் அமைந்துள்ளது

**55 BONDWAY**
**LONDON SW 8**
**TEL: 071-582 4635**

தென் இலண்டன் வாழ் தமிழ் அகதிகள் தங்களின் தேவைகளுக்கு எமது மேற் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**எமது சேவைகள்:**

(1) தமிழ் அகதிகளுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவி களைப் பெறுவதற்கு (Income support, Housing benefit Etc.) ஆலோசனை அளித்தல்

(2) வீட்டு வசதிகள் தொடர்பான ஆலோசனை வழங்குதல்

(3) குறுகிய/நீண்ட கால வீடுகளில் வீட்டு வசதி செய்து கொடுத் தல்

(4) குடும்பங்கட்கு அரசாங்க வீடுகள் எடுப்பதற்கான ஆலோச னைகள் வழங்குதல்

(5) அகதிகள் அந்தஸ்து கோரும் விண்ணப்பங்கள், வேலை அனுமதிப் பத்திரங்கள் போன்றவற்றிற்கான ஆலோசனைகள் வழங்குதல்

மற்றும் மேலதிக விபரங்கட்கு "55 BONDWAY, LONDON SW 8. TEL: 071-582 4635 இல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் காலை 10 மணி முதல் மாலை 5.30 வரை நேரடியாகவும் ஏனைய நாட்களில் தொலைபேசி மூலமும் தொடர்பு கொள்ளலாம்.

**தமிழ் அகதிகள் வீடமைப்பு கழக நிர்வாகக் குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A Member of the National Federation of Housing Associations
Registered under Industrial and Provident Societies Act 1965, Reg. No.25085 R

# சமர்ப்பணம்

சுதந்திர தாயக மலர்விற்காய்
தம் உயிரை உவந்தளித்து
தர்மநெறி நின்றிட்ட
ஈழத்தமிழ் மக்களுக்கும்,

வீரம் செறிந்த மானப்போரில்
தாகம் நிறைந்த நாட்டுப்பற்றுடன்
தாயகம் தழைக்க தமைஈந்து
விண்ணகம் சென்ற வீரமறவர்க்கும்,

புனித பூமியாம் தாய்மண்ணை
தாங்கொணாத் துயரங்களின் மத்தியிலும்
விட்டகலாது, துயரங்களைத் தாங்கிநிற்கும்
தாயகம் வாழ் தமிழ் மக்களிற்கும்,

புலம் பெயர்ந்து கடல் கடந்து
வாழநேரினும் தாய்நிலம் நினைந்து
அதன் தேவைகள் அறிந்து தமது பங்கினை
ஆற்றிடும் உலகத் தமிழருக்கும்

‘ புலரும் மாலை ’ யையும்,
இம்மாலையின் மலர்வான
’உயிர்த்துளி’ மலரினையும்
சமர்ப்பணம் செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்துளி

உயிர்த்துளி கொடுத்திட வாருங்கள்! - இந்த
உணர்வுடன் நாட்டினைப் பாருங்கள்!
சரித்திரம் படைத்திடுவோம் என்றே - பெருஞ்
சனத்திரளாய் வந்து கூடுங்கள்!

வயிற்றினுட் சுமந்தவள் அழுகின்றாள்! - ஒரு
வைத்தியம் இன்றியே மடிகின்றாள்!
கயிற்றினில் நம்மினம் தூங்குகையில் - நாம்
களிப்பினில் மிதப்பதும் அழகாமோ?

நம்....
உயிரினில் ஒரு துளி தந்திடுவோம் !
அவர்....
உயிர்க்கொரு துளியெனத் தந்திடுவோம்!
இவ்....
உயிர்த்துளி நிலத்தினில் வீழ்ந்துயிர்த்துப்
புது....
உயிர்த்துளியாய் மறுபிறப்பெடுக்கும்!
நம்....
இனத்திடை பூத்த நல்லுயிர்த்துளிகள்...
நாம்....
உயர்ந்திட உறங்கிய உயிர்த்துளிகள்...
இயற்றிய மாதவம் ஒளிபெறவே...
உயிர்த்துளி நாங்களும் சிந்திடுவோம்!

-- **புலவர்**.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன்......

**தா**யகத்தில் தாங்கொணாத் துயரங்களுக்கு மத்தியில் காடுக ளின் உள்ளும், மரங்களின் கீழும், அகதி முகாம்களிலும், தெருவோரங்களிலும், உண்ண உணவின்றி, வைத்திய வசதி யின்றி, போசாக்கின்றி அல்லற்பட்டு ஆற்றொணாத் துயரங் களுக்கு மத்தியில் அகதிகளாக அவதியுற்றுக் கொண்டிருக்கும் எமது உடன் பிறப்புக்கள் பிஞ்சுக்குழந்தைகள் தினம் தினம் மடியும் நிலை கண்டு, எம்மால் இயன்றவரை அவர் துயர் துடைக்க உதவிக் கரம் கொடுக்கும் உன்னத நோக்குடன் 'புனர்வாழ்வு வழங்கக் கரம் தரும் மாணவர்'(SSHR) ஆகிய நாம் இப்பணியினூடாக எமது பங்களிப்பைத் தொடர்கிறோம்.

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, உறைய இடமின்றி, புண்பட்ட உடலைக் காக்க மருந்தின்றி, நோய் தீர்க்க வைத் திய வசதியின்றி வெந்து வதங்கி உயிர் காக்க வழியின்றி வாடும் எம்மவர்க்கு, நம் உயிரில் ஒரு துளிதந்து, அவர் உயிர்க்கொரு துளியெனத்தந்து உதவிடுவீர் என்ற உணர்வுடன் 'உயிர்த்துளி' என்ற இம் மலரினூடாக உங்கள் உளத்தினுள்ளே நுழைகின்றோம்.

**புனர்வாழ்வு வழங்கக் கரம் தரும் மாணவர்.**
**Students Stretching Hands for Rehabilitation**
**28 Burges Road, Eastham, London E6 2BH**
**Tel: 081 - 552 5095**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மனச்சாவு

எத்தியோப்பியாவிலும்
சோமாலியாவிலும்
பட்டினிச் சாவாம்!
பல்லாயிரவர் சாவாம்!
ஐயையோ! ஆண்டவனே!
வேண்டாமே அக் கொடுமை!
அ !
என் மண்ணிலும் சாவு!
வடக்கிலும் கிழக்கிலும்
பல்லாயிரவர் சாவு!
பட்டினிச் சாவா இச் சாவும்?
அல்ல! அல்ல!
நட்டணைச்சாவு!
உரிமைப் பசியெடுக்க
உயர்த்திக் குரல் நாமெழுப்ப,
எதிரிக் கொடியவரும்
எம்மிடையே முளைவிட்ட
புல்லுருவிக் கொடியவரும்
கொடியோடெமையொடுக்க,
மிடுக்கெடுக்க-
கடைகட்டி வெளியிலே
ஓடிவந்த நாமெல்லாம்
கை கட்டி நிற்கும் கடைநிலையில்-
உதவிக்கரம் நீட்டாது
ஒதுங்கி நிற்கும் இழிநிலையில்-
எம்மண்ணில் நிகழவிட்டோமே- சாவு
அந்தச் செயலே பெருஞ் சாவு!
எம்- மனச் சாவு!
பின்னையென்ன?
வெறும் பட்டினிச் சாவா சாவு?
-----கரகன்.


# School of Computing & Business Management

1.Ruby Road, Walthamstow,London E17 4RE. Tel: 081 521 9003

## Courses in Computing leading to

**City & Guilds of London Institute**
**and**
**British Computer Society**
**Qualifications**

Other training modules covering:-

Wordprocessing : Word star/Wordperfect & Word for Windows
Spread sheets : Lotus 123/Excel 4.0 for Windows
Data bases : Dbase III+/Dbase IV
Programming: GW Basic/Quick Basic,
Turbo Basic/Visual Basic
Turbo Pascal 6.0, Cobol
Turbo C & Clipper 5.0

**Operating System : MS DOS & WINDOWS 3.1**
**Mathematics : For GCSE(O/L) & GCE(A/L)**
**Physics : For GCSE(O/L) & GCE(A/L)**

Further details:
Contact Mr.S.Ganeshalingam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமவிருந்தினரின் செய்தி

தாய் நாட்டிலே எமது மக்கள் படுகின்ற துயரங்களை, வெளிநாட்டில் உள்ள அவர்களின் உடன் பிறப்புக்களாகிய நாம் இதயசுத்தியோடு சிந்தித்து எங்கள் கடமைகளைச் செய்ய முன்வரவேண்டும்.

மக்கள் உண்பதற்கு உணவில்லாமல் கஸ்ரப்படுகின்றார்கள். குழந்தைகளுக்கு பால்மா இல்லை, சத்துணவு வசதி இல்லை, நோய்களைப் போக்குவதற்கு வைத்தியசாலைகளில் மருந்தில்லை, வைத்தியம் செய்ய போதிய வைத்திய வசதிகளில்லை இந்நிலையில் மக்கள் பெரிதும் துன்பப்படுகிறார்கள்.

இந்தப் பரிதாப நிலையை உணர்ந்து மாணவர் சமுதாயம் உதவிக்கரம் கொடுக்க முன்வந்தது நல்லதோர் அறிகுறியும் புலம் பெயர்ந்து வாழும் ஏனைய மாணவர்களுக்கு நல்லதோர் தூண்டுதலுமாகும்.

■ **டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னலப்படும் எம்மவர் துயர் தீர்ப்பதெம் கடன்" என
செயல்படும் மாணவர் பணி
தாயின் பணியின் சாலச்சிறந்து

**Chetty and Company**

***Solicitors***

Tel : (081) 521 1313
Fax: (081) 521 1721

79 HOE STREET
WALTHAMSTOW
LONDON E17 4SA



**நகைப் பிரியர்களே !**

இலங்கை முறையிலான
ஓடர் நகைகளை தரமான
முறையில் பெறுவதற்கும்
திருத்த வேலைகளை செய்வதற்கும்
நாட வேண்டிய இடம்

M.JEGATHEESAN
27,CALEDON ROAD,
EASTHAM
LONDON E6 2HE

TEL NO: 081 471 6890


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கடன்

**நா**ம் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த சொந்த நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்து பெற்றார், உற்றார், உறவினரை, குடும்பத்தைப் பிரிந்து நாடுவிட்டு நாடு வந்து வெளிநாட்டில் வாழும் நாம் எமக்கென்றொரு கடைமை இருப்பதனை மறக்கவில்லை.

எம்மண்ணில் இன்று நடக்கும் கொடுமைகளை நாளாந்தம் நாம் அனைவரும் அறிந்த வண்ணம்தான் இருக்கின்றோம். அதில் முக்கியமாக பட்டினிக் கொடுமையாலும் நோய் நொடியாலும் நம்மவர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் அளவிடற்கரியனவாக உள்ளன. 'உறுபசியும் ஓவாப் பிணியும்' இன்று நம்மவரைப் பீடித்துள்ளது. இதிலிருந்து அவர்களைக் காத்து உயிர்வாழ வைக்கும் கடமை எமக்கு உண்டு.

வயிற்றுப் பசி போக்க எத்தனை நாள்தான் அவர்கள் வயிற்றில் ஈரச் சேலை கட்டி வாழ்வது, சாதாரண நோய்களுக்குக் கூட மருத்துவ வசதியில்லாத கொடுமையால் தீராத நோய்கள் வந்து அவர்களைப் பலிகொள்ளுதல் சாதாரண நிகழ்வாகிவிட்டது. இவற்றிலிருந்து அவர்களுக்கு எப்போது விமோசனம் கிடைக்கப் போகிறது. வெளிநாட்டில் உள்ள அவர்களின் உடன்பிறப்புக்களாகிய நாம், இங்குள்ள பல சிரமங்களின் மத்தியிலும் உதவி செய்து அவர்களுக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளான உணவு, மருந்து போன்றவற்றை உரிய முறையில் கிடைக்க வகை செய்ய வேண்டும். இப்படி உதவுவதன் மூலம் ஓரளவுக்காவது பட்டினிச் சாவிலிருந்தும், வைத்திய வசதியில்லாத நிலையிலிருந்தும், சத்துணவுக் குறைவிலிருந்தும் எம் இளைய தலைமுறையை எதிர் கால சந்ததிகளான குழைந்தைச் செல்வங்களை, எம் உடன் பிறப்புக்களை வாழ வைக்க முடியும்.

எனவே, புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் நாம் ஒவ்வொருவரும் எம்மாலியன்ற உதவிகளை நல்கி, எம் உடன் பிறப்புக்கள் உயிர் வாழ வழிவகை செய்வோம் என்று திடசங்கற்பம் பூண்டு எம் கடனைத் தொடர்வோம்.

**S. S. H. R**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம் தீயினில் எரிகையில்....

கற்பனை ஆயிரம்
செய்து நாம் கண்ட
சுதந்திர நாடு
சுடுகாடாகுது.
விடுதலை வேள்வியில்
ஆகுதியாய் நிதம்
மக்கள் குருதியால்
பூமி நனையுது.
நாம் பாடித் திரிந்த மண்
பொங்கியழுகுது.
பசுஞ்சோலை இன்று அங்கு
பாலையாகுது.
போன வாரந்தான்
பிறந்த குழந்தையும்
பெற்ற தாயின்
'பிணமார்பிலே' தவழுது.
பெற்றதாயை,தந்தையை
இழந்த
சின்னஞ் சிறுசுகள்
தெருவினில் திரியுது.
துடிதுடித்து
தம் சோதரர் வாடையில்
எதிரி கோட்டையில்
எட்டப்பராய் சிலர்.
ஏவல் நாய்களாய்
ஏந்திப் பிழைப்பவர்
எங்கள் தேசத்தின்
குருதியில் காய்பவர்.
நாம்!
புதுப்பாதை தேடி
ஓர் புரட்சி நடக்கையில்
வெளிநாடு நோக்கி
வெட்டியாய் ஓடினோம்.

நாம் வளர்ந்த மண்ணிது-
வாழ்ந்த மண்ணிது.
அது வெந்தழிகையில்
வேடிக்கை பார்ப்பதா?
பட்டினியால் தினம்
பிள்ளைகள் வாடையில்-
பார்த்திருந்தும் நாம்
எம்பாட்டில் இருப்பதா?
பத்தி பத்தியாய் வசனங்கள் கூறி-
படலம் படலமாய் பாக்கள் பாடி-
எம் பாதி நாளை வெறும்
பேச்சில் கழிப்பதா?
நாட்டில் தம்பியர்
தாக்குதலில் உழலையில்
வெளிநாட்டில் இங்கு நாம்
விளையாடித் திரிவதா?
எங்கள் சோதரர்
இன்னலில் வாடையில்
இங்கிலாந்தில் நாம்
இருட்டில் வாழ்வதா?
சொத்திழந்தவர்.
தம் சுகமிழந்தவர்.
பொட்டிழந்தவர்.
தம் பூவிழந்தவர்.
மனை விளக்கையும்
மக்களையும் இழந்தவர்.
உற்ற சொந்தங்கள்,
உறவை இழந்தவர்.
என்ன வேண்டுவார்
இன்னும் எம் மண்ணில்?
பட்ட துன்பங்கள்
சட்டென மறக்காது.
கொட்டிய குருதி
கொள்கையை மூடாது.

மண்ணில் நடப்பது
கண்ணில் தெரியுது-
இன்னும் சொல்லி யார்
அதை விளங்க வேண்டுவார்?
வாடி வதங்கும் பயிருக்கும்
ஒரு வான் மழை வந்து
உயிருட்டும்.
விழி தேடித் தவிக்கும்
எம்மவர்க்கும்
இன்னும் எத்தனை பேரினால்
உதவி கிட்டும்.
சொந்த நாட்டிலே
சோதரர் மாள்கையில்
இன்னும் நாம் இங்கு
என்ன செய்கிறோம்?
கண்ணுறங்கி நாம்
நடித்தது போதும்.
காவல் செய்ய எம்
கரங்களை உயர்த்துவோம்.
செந்தணலிலே
வெந்தழிகின்ற
எம்மண் தமிழர்
துயர் நீக்க
-ஒன்றிணைவோம்.
இன்றே நாம்
உதவிடுவோம்.-

***** புங்கை தயான் *****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வுப் பணியில் மாணவர்கள் பங்கு

யாருக்கு இந்தப் புனர்வாழ்வு? ஏன் இந்தப் புனர்வாழ்வு? இந்த புனர்வாழ்வுப் பணியில் மாணவர்கள் ஏன் சம்பந்தப்பட வேண்டும் என்ற கேள்விகளுக்கு விடையளிப்பதன் மூலம் இப் புனர்வாழ்வுப் பணியில் மாணவர்களின் பங்களிப்பை நாம் புரிந்து செயல்படக்கூடியதாக இருக்கும்.

மிக நீண்ட காலமாக இலங்கையின் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர்கள் மீது இலங்கை அரசு பாரபட்சமான முறையில் நடந்து வருவது நாடறிந்ததே. அண்மைக்காலங்களில் இக்குரோதம் பலமடங்கு மேலோங்கித் தமிழின அழிப்பு நடவடிக்கையில் நேரடியாகவே அரசு இறங்கியிருப்பது உலகறிந்த உண்மை. இவ் இன அழிப்பு நிலையை படிப்படியாக இலங்கை அரசு செய்து வருவதால் வெளிநாடுகளின் கவனத்தில் அது பெருமளவில் தெரிய வராது போய்விடுகிறது. திட்டமிட்ட இந்த இனஅழிப்பின் அங்கங்களாக பொது மக்கள் பெருமளவில் வாழும் குடிமனைப் பகுதிகளை நோக்கிய செல் தாக்குதல், திட்டமிட்ட பிரயாணத்தடை, உணவுத்தடை, மருந்துத்தடை, தபால்தடை, மின்சாரஎரிபொருள்தடை, தொலைபேசித்தடை, அத்தியாவசிய பொருட்களுக்கான தடை, கல்வி, பாடஉபகரணங்களுக்கான தடை இப்படி பலதடைகளை உருவாக்குவதன்மூலம் ஓர் இனஅழிப்பை வெற்றிகரமாகச் செய்யலாம் என்பது கண்கூடு. ஆனால் இத்திட்ட மிட்ட இனஒழிப்பைத் திட்டமிட்டே தடுத்துநிறுத்த முடியும்.


இந்த வகையில் பல அரசு சார்பற்ற நிறுவனங்கள் பெருமளவில் தங்கள் பணிகளைத் திறம்பட செய்கின்றன. இலங்கை அரசு தமிழ்மக்களைக் கொன்று குவிக்கும் அதே வேளை வெளிநாடுகளில் நிதி, ஆயுத உதவியை பெறுவதற்காக கப்பல்களில் வடக்குகிழக்குக்கு உணவு அனுப்பும்போது வெளிநாட்டு நிருபர்களுக்கும் தங்கள் சாகசச்செயல்களை காட்டி இக்கப்பல்களை வடக்குக்கிழக்குக்கு அனுப்புகிறது. கொழும்பில் இருந்து புறப்படும் கப்பல்கள், இடையே பலஇடங்களில் அரச அதிகாரிகளினால் கொள்ளையடிக்கப்பட்டு அரைகுறை உணவுடன் வடக்குக்கிழக்குக்கு அனுப்பப்படுவது அண்மைக்காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே. இத்தகைய சூழ்நிலையில் ஒரே தாயின் ஒரு பிள்ளை வெளிநாட்டில் பணவசதியோடு, பாதுகாப்போடு சந்தோசமாக வாழும் வேளையில் அதேதாயின் மற்றப் பிள்ளை அடுத்தநேர உணவு கிடைக்குமா, கிடைக்காதா, இன்று பாடசாலை திறக்குமா, இன்று செல் அடிநடக்குமா, நாளை உயிருடன் நான் எழும்புவேனா என்ற கேள்விகளுக்குப் பதில் தேடி விழிக்கிறது. இந்நிலையில் மாணவர்களாகிய நாம் எங்கள் உடன் பிறந்தோரின், சிறு வயதில் விளையாடி மகிழ்ந்த பள்ளித் தோழர்களின் இன்றைய நிலைமைகளைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எங்கள் நாட்டில் எங்கள் உறவினர்களுடன், நண்பர்களுடன் பழகிய அதே உரிமை, உறவு, நட்பு, பாசம் கடல் கடந்து வந்தவுடன் இல்லாமல் போய்விடும் என்று கூறுவது துரோகத் தனமாகும். தாயகத்தில் வாழும் மாணவ மணிகள் தங்களுக்கு எங்களைப் போன்ற வசதிமிக்க வாழ்வையோ அன்றி வளர்ப்பையோ எதிர்பார்க்கவில்லை. அரைவயிறு உணவுடனாவது தங்கள் எதிர்கால சொத்தான கல்வியை தொடரவேண்டும், நாட்டில் உள்ள மூலவளத்தைக் கொண்டு தங்கள் மூளைவளத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே அவர்கள் பேரவா. எதியோப்பியாவிலும் நைஜீரியாவிலும் உள்ள பிள்ளைகளுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் உதவியின் மிகச் சிறுபகுதி அளவு கூட எமது பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லை. எனவே, நாங்கள் எங்கள் இனமக்களின் இன்றைய அவலத்தை தடுத்து நிறுத்தாவிடின் நாங்கள் தமிழர்கள் என்று சொல்வதிலோ அன்றி இங்கு தமிழுக்கு விழா எடுப்பதிலோ எந்தவித அர்த்தமும் இருக்கப்போவதில்லை. காலம் கடந்து கொண்டு வருகின்ற இந்த வேளையில் நாம் இன்னமும் காலம் தாழ்த்தாது எம்மாலான உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் பணத்தைத் தவிர வேறு எந்தப்பொருளும் வடகிழக்குக்கு அனுப்பமுடியாத துர்ப்பாக்கிய நிலை நிலவுகின்றது. இன்னிலையில் மாணவர்களாகிய நாங்கள் எங்களுடன் கல்விகற்கும் மாணவர்களுக்கு தாயக மாணவர்களின் நிலையை எடுத்தியம்பி பெருமளவில் அவர்களின் உதவியைப் பெற்றுத் துரித சேவையில் இயங்க வேண்டும். எவ்வழி பணம் சேகரிக்க நல்வழியோ அவ்வழியில் துரிதமுடன் செயற்பட்டு எமது நிவாரண உதவி அவர்களின் கரங்களை அடைய நாம் இடையறாது முயற்சிக்க வேண்டும். ஈழமக்களின், மாணாக்கரின் அவலத்தை துடைக்க திடசங்கற்பம் கொண்டிருக்கும் இவ்வுதவிக் கரம் வழங்கும் மாணவர்களின் கரங்களை மேன் மேலும் வலுப்படுத்துவோம்.

**- - பாலரவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வா?

இன்று தமிழீழ மக்கள் தங்களுடைய அடிப்படை வசதிகள் யாவற்றையும் இழந்
கள். இதில் குறிப்பாக யாழ்க்குடாநாடு சகல விதத்திலும் வெளித்தொடர்பு
தமிழீழத்தில் மரணம் என்பது சாதாரணமாகிவிட்டது. இந்த மரணத்திலும்
வாழ்க்கையின் சில அம்சங்களை நோக்குவோம்.

உணவு:- சிறீலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத்தடையால் சகல வித
நிலவுகிறது. எரிபொருட் தடையால் விவசாயம் முற்றாகவே பாதிப்படைந்துள்
ளும் அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது என்று ஏக்கமடைகின்றனர்.
போசாக்குணவு இல்லாததால் அவர்களின் உடலமைப்பு மாறுபாடு அடைந்து

அகதிமுகாம்கள்:- இன்று தமிழீழத்தின் பெரும்பாலான பாடசாலைகள், கோ
வீடு, தொழில் உட்பட சகல உடைமைகளையும் இழந்த நிலையில் மக்கள்
நெஞ்சும் கரையும். போதிய இடவசதிகள் இல்லாததால் மரங்களுக்கு கீழ் வெ
வாழ்வு அவலமானது. இங்கு போதிய சுகாதார வசதிகள் இல்லாததால்
பாதிப்படைந்து நூற்றுக்கணக்கான சின்னஞ்சிறுசுகள் நாள்தோறும் இறந்து
பல்வேறு நிறுவனங்களும் திணறுகின்றன. ஏனெனில், நாளுக்கு நாள் அகதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ? சாவா?

யும் இழந்து வாழ்வா? சாவா? என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்
தொடர்புகள் அற்ற நிலையிலும் பட்டினிச் சாவின் விளிம்பில் நிற்கிறது.
திலும் கொடுமையான அவல வாழ்க்கை தமிழர்களுடையது. இந்த அவல

கல விதமான உணவுப் பொருட்களுக்கும் தற்போது பெரும் தட்டுப்பாடு
டைந்துள்ளது. தொழில் இழந்தவர்களும், அகதி முகாம்களில் வாழ்பவர்க
கின்றனர். சின்னஞ்சிறு குழந்தைகளும், கர்ப்பிணித் தாய்மார்களும் தகுந்த
புடைந்து இறுதியில் பல்வேறுபட்ட நோய்களுக்கும் ஆளாகின்றனர்.

கள், கோயில்கள் அகதி முகாம்களாக மாறிவருகின்றன. தமது சொத்து,
ல் மக்கள் தங்கள்வாழ்க்கையை ஓட்டி வருவதை நேரில் பார்த்தால் கல்
த கீழ் வெய்யில், மழை என்று பாராது நாடோடிகளாக வாழும் எம்மக்களின்
லாததால் மலேரியா, நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்று நோய்களால்
இறந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்குரிய நிவாரணம் வழங்குவதற்கு
அகதி முகாம்கள் பெருகிக் கொண்டே வருகின்றன.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**(முற்பக்க தொடர்ச்சி) வாழ்வா?...**

போக்குவரத்து:- தமிழீழத்தின் இன்றைய பிரதான போக்குவரத்து சாதனமாக துவிச்சக்கர வண்டியே உள்ளது. சிறுவர் தொடக்கம் வயோதிபர் வரை ஆண், பெண் வேறுபாடு இன்றி வீதிகளில் சைக்கிளில் செல்வதைக் காணலாம். நீண்ட தூரப் பிரயாணங்கள் கூட சைக்கிள் மூலமே கூடுதலாக மேற்கொள்ளப்படுகிறது. நோய் வாய்ப்பட்ட வயோதிபர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு மாட்டு வண்டில்கள் பயன்படுத்தப்படுகின்றன. இராணுவத் தாக்குதல்களால் காயப்படு பவர்களை விரைவாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு வசதிகள் இல்லாததால் பலர் இடையிலேயே மரணமடைகிறார்கள். மரணப் பொறிப்பாதையான கிளாலிப் பாதையில் வாரந்தோறும் நடைபெறும் படுகொலைகள் தமிழீழத்தின் போக்குவரத்து எந்த நிலையில் உள்ளது என்பதை புலனாக்கும்.

கல்வி: உயர்ந்த கல்விமான்களை உருவாக்கிய தமிழினம் இன்று கல்விக்காக ஏங்குகிறது. பல பாடசாலைகள் விமானக்குண்டு வீச்சாலும் இராணுவ நடவடிக்கைகளாலும் முற்றாகவே பாதிப்படைந் துள்ளன. இன்னும் சில அகதிமுகாம்களாக மாறிவருகின்றன; இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பாடசாலைகள் இராணுவ முகாம்களாக மாறியுள்ளன. கல்வி கற்பதற்குத் தேவையான அப்பியாசப் புத்தகங்கள் கூட அரசினால் தடைசெய்யப்பட்டுளளன. பேனா பென்சிலுக்குக் கூட பெரும் தட்டுப்பாடு. இரவில் படிப்பதற்கு வெளிச்சம் இல்லை. உயர்தரப் பரீட்சைகள் ஒழுங்காக நடைபெறு வதில்லை. எந்த நேரத்திலும் விமானத்திலிருந்து பாடசாலையை நோக்கி குண்டுகள் வீசப்படலாம்.

விமானக்குண்டு வீச்சும், எறிகணைத் தாக்குதல்களும்:- பகல் நேரங்களில் மக்களின் குடியிருப்புக் கள் மாத்திரமன்றி பொதுமக்கள் அதிகமாகக் கூடும் சந்தைகள் கோயில்கள் என்று இலக்கு வைத்தே விமானங்களில் இருந்து கண்மூடித்தனமான முறையில் குண்டுகள் வீசப்படுகின்றன. இத்தாக்குதல் களுக்கு பாடசாலைகள், வைத்தியசாலைகள் கூட விதிவிலக்கல்ல. தற்போது பயன்படுத்தப்படும் மிகையொலி விமானங்கள் மிகவும் மோசமான முறையில் விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

நள்ளிரவு நேரங்களில் நேரம், இடம், திசை என்றில்லாமல் இராணுவ முகாம்களில் இருந்து கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. உளவியல் ரீதியாக மக்களை மனந் தளரச் செய்யும் மோசமான நடவடிக்கை இது.

குழந்தைகள், வயதானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், கர்ப்பிணிகள் என்று அனைத்துத் தரப்பினருமே பதுங்கு குழிகளிலேயே பெரும்பாலும் தமது இரவைக் கழிக்கிறார்கள். இத்தாக்குதல்க ளால் நாளுக்கு நாள் எம்மக்கள் உயிர் இழந்தும் அங்கவீனர்கள் ஆவதும் பயப்பீதியால் மனநோய்க்கு ஆளாவதும் தொடர்கதையாகி வருகின்றது.

வைத்தியசாலைகள்:- போதியளவு டாக்டர்கள், தாதிமார்கள் இல்லாது அதிகளவான நோயாளர்க ளைக் கொண்டுள்ளது இன்றைய எமது வைத்தியசாலைகள். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் எடுத்துவரப்படும் மிகவும் குறைந்தளவான மருந்துப் பொருட்களைக் கொண்டே சிகிச்சை அளிக்கப்படுகின்றது. விசர்நாய்கடி மருந்துத் தட்டுப்பாட்டால் இன்று எம்மக்களில் பலர் மரணமடை கிறார்கள். கிளிநொச்சியில் சில பகுதிகளில் தொற்றுநோய்கள் பரவலாகக் காணப்படுவதால் அவை தடைசெய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையிலும் எம்மக்களால் சில மாற்றீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மின்சாரம் இல்லை. விளக்கெரிக்க மண்ணெண்ணெயின் அதிகரித்த விலை. இவற்றிற்குப் பதிலாக பஞ்சு விளக்குகள் இன்று பிரபல்யம் அடைந்துள்ளன. பற்றரிகளின் தடையால் மக்கள் வானொலி கேட்பதற்கு சயிக்கிள் டைனமோவைப் பாவிக்கின்றனர். சவர்க்காரம் தடை. இதற்குப் பதிலாக உடைகளைத் துவைப்பதற்கு பனாட்டு, சாம்பல் என்பன பயன்படுத்தப்படுகின்றன. பெற்றோல் வாகனங்கள் மண்ணெண்ணெயில் ஓடுகின்றன. மண்ணெய், தாவரநெய் கலந்து டீசல் தயாரிக்கப்படுகின்றது.

மேலே கூறப்பட்டுள்ள எமது மக்களின் அவல வாழ்வை நிவர்த்தி செய்ய முடியாதா? முடியும்! எல்லோரும் மனது வைத்துச் செயற்பட்டால் எதையும் வெற்றிகரமாகச் செய்யலாம். வெளிநாடுகளில் வாழும் நாம் இன்று தமிழ் மக்கள் எமது தாய் நாட்டில் படும் இன்னல்களை குறிப்பாக பட்டினிச் சாவின் விளிம்பில் இருந்து சாவுடன் போராட்டம் நடத்தும் மழலைகளை நினைத்தாவது எம்மக்க ளுக்கு உதவி செய்ய முன்வர வேண்டும்.

-- **இராசையா முரளிதரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பெரும்பேறு

எங்கள் மண்ணும் எங்கள் உறவும்
எதையும் விஞ்சும் ஏற்றம் பெற்றவை;
கண்ணனை தலையை வானில் தாங்க
மண்ணே வேண்டும் கால்கள் பதிக்க;
போற்றுவோம் என்றால் நெற்றியில் நீறு;
தூற்றுவோம் என்றால் எருக்கலைக் கீறு!

மண்ணில் இருந்து பெயர்ந்தவர் எல்லாம்
கண்ணில் மகிழ்ச்சி ஒளியோ கொண்டோம்?
ஊரோடிணைந்த இளங்கொடி உறவை
வேரோடறுக்க முடிந்ததோ எமக்கு?
மண்ணின் உறவு கண்ணிலே இல்லை!
கண்ணைக் கடந்ததவ் வுள்ளுறை ஓதல்!

ஊரை ஒடுக்கும் கொடு வெறிக் குரலின்
ஓரை ஒடுக்க எதை நாம் செய்தோம்?
பாதை மறித்துப் பட்டினிப் போரைப்
பாவியர் தொடுத்தார்; எப்படி முறித்தோம்?
அனாதைக் குஞ்சுகள் ஏதிலி முதியோர்
அயர்வது கேட்டோம்! எவர் துயர் துடைத்தோம்?

எங்கள் மண்ணும் எங்கள் உறவும்
எதையும் விஞ்சும் ஏற்றப் பேறவை!

......................ஈழக் கூத்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BURGES PROPERTY SERVICES

**THE LETTING AND MANAGEMENT SPECIALISTS**

**28,BURGES ROAD , EAST HAM, LONDON E6 2HB**

## PROPERTY OWNERS

WE URGENTLY REQUIRE ALL TYPES OF PROPERTIES TO ACCOMMODATE OUR LONG LIST OF TENANTS. CALL US FOR A PROFESSIONAL MANAGEMENT & LETTING SERVICE

## TENANTS

ARE YOU LOOKING FOR ROOMS , HOUSES , FLATS
BEDSITS STUDIOS, BUSINESS PREMISES, ETC.
FOR ANY OF YOUR NEEDS PLEASE DON'T HESITATE
TO CALL US FOR MORE DETAILS. **DSS WELCOME**

## OTHER SERVICES

**WE PROVIDE PROFESSIONAL SERVICES IN :**

CENTRAL HEATING
PLUMBING
CARPENTRY
ELECTRICAL
INSTALLATION
REFRIGERATION
SUSPENDED CEILING
FLOOR TILING
DECORATION
RENOVATION
KITCHEN, TOILET &
BATH FITTING
CARPETING

**VAN HIRE & REMOVAL**

**FLIGHT TICKETS ARRANGED**

**PLANS DRAWN AND ESTIMATES PREPARED FOR HOME EXTENSIONS**

**PHOTO COPYING AND FAXING AT CHEAPER RATES. VIDEO FILMING, PHOTOGRAPHY, WORD PROCESSING & LETTER WRITING**

PLEASE DO CALL OR FAX US AT ANY TIME

**ON 081- 552 5240**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் வாழும் தமிழர்களே!
## உடன் பிறப்புகளுக்கு உதவுங்கள்

பதினேழு ஆண்டுகள் தொடர்ச்சியான அவசரகால சட்ட, சிங்கள ஆட்சியில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் அனுபவித்துவரும் இன்னல்களையும், - சோக நிகழ்ச்சிகளையும், பட்டினியினால் வாடிவதங்கிக்கொண்டிருக்கும் பரிதாப நிலையையும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தமிழ் மண்ணைப் பாதுகாத்து தமிழர் உரிமையை நிலைநாட்ட நடந்து வரும் பத்து வருட போராட்டத்தினால் உயிர் இழந்த தமிழர்களின் எண்ணிக்கை 45,000 அப்பாற்பட்டுவிட்டது. சொந்த நாட்டில் வாழமுடியாது என்ற காரணத்தினால் சுமார் 250,000 மேற்பட்டதமிழர்கள் வெளிநாட்டில் அகதிகளாக வாழ்கின்றனர். ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்டோர் உள்நாட்டில் 200 ற்கும் மேற்பட்ட அகதிகள் முகாமில் வாழ்கின்றனர். ஏனையோர் சொந்த வீடுகளில் அகதிகளாக வாழ்கின்றனர். அரசாங்கம் கிள்ளித்தெளிக்கும் அளவு உணவுகளையும் போசாக்கில்லா உணவுகளையும் உண்ண வேண்டிய நிலையில் உள்ளனர்.

வட கிழக்கில், தொழிற்சாலைகள், வர்த்தக நிலையங்கள், கமத்தொழில், கடற்றொழில், சுயதொழில் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் உள்ளன. அதனால் இலட்சக்கணக்கானோர் வேலையிழந்துள்ளனர். தொழிலின்றி, வருவாயின்றி தவிப்பவர் தொகை இலட்சம். இவர்கள் வாழ வழிஎன்ன?.

"தமிழ்ப் பகுதிகளிற்கு குறிப்பாக வடபகுதிக்கு பிரயாணத்தை நினைத்தால் மறு உலகிற்கு சென்று திரும்பும் நரக வேதனை" என அண்மையில் யாழ் சென்று லண்டன் வந்துள்ள பி. பி. சி. தமிழோசை நிருபர் கூறியதிலிருந்து போக்குவரத்து நிலை புரிகிறது. இலங்கை அரசு விதித்துள்ள பொருளாதாரத் தடை 45 இற்கு மேற்பட்ட அத்தியாவசியப் பொருட்களை யாழ் பகுதிக்கு எடுத்துச் செல்ல கூடாது என்ற கட்டுப்பாடு, அங்கு வாழும் மக்களுக்கு மிக மோசமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

உணவின்றி, மருத்துவ வசதியின்றி, செத்து மடியும் எம் மக்கள் நிலைமையை உணர்ந்த வெளிநாட்டில் கல்விபயிலும் மாணவர்கள் கரம் கொடுத்து உதவ முன்வந்துள்ளனர்.

நிதி சேர்த்து நேரடியாக அம் மக்களுக்கு உதவும் பெரும் தொண்டை இம் மாணவர்கள் ஆற்றி வருகின்றனர். அம்மாணவர்களின் காருண்ய பணிக்கும் முயற்சிக்கும் இதயபூர்வமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கி, எம் உடன் பிறப்புக்களின் உயிர் காக்கும் பணியில் நாமும் பங்கு கொள்வோம்.

**ஐ. தி. சம்பந்தன்**
**உலக சமாதானமன்றம் ( U.K )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊறங்கு வந்த பின்னும் ........

ஊரெங்கும் அழுகுரல்கள்
ஓயாமற் கேட்கிறது
பாரெங்கும் பறந்து சென்று
பரந்திருக்கும் தமிழினமே
ஊறங்கு வந்த பின்னும்
உறங்கிக் கிடப்பதேனோ? !

உண்ண உணவும் உடுக்க உடையும்
உறைய இடமும் இன்றியே வாடும்
எங்கள் உறவை நெஞ்சில் எண்ணி
பொங்கும் உணர்வுடன் சிந்தித்தாயா? !

உற்றாரை ஓர் கணம்
உளத்தினில் நினைந்து பார்!!

பொருளாதாரத்தடையென்னும்
பொல்லாத கொடுமையினால்
புழுவாய்த் துடிதுடித்து
உயிரைத் தினம் இழக்கும்
எம் - உடன் பிறப்பின்
உணர்வுகளை எண்ணிப்பார்!!

வைத்திய வசதியின்றி
சத்துணவு சற்றுமின்றி
வாடுகின்ற எம் மண்ணின்
மழலைகளைப் பார்!!

காயமதில் காயம் பட்டு
உளத்தினில் புண்பட்டு
உடலால் நோய்ப்பட்டு
மருந்தின்றி மடியும்
கொடுமையைப் பார்!!

பயிர்கள் வாடவே
பார்க்க மனம்பொறாப்
பண்பினர் நாம் - நம்
உயிர்கள் ஊசலாடப்
பார்ப்போமோ? ! கேளீர்!!!

ஊறங்கு வந்த பின்னும்
இன்னும் ஏனோ.......

சிந்திய குருதியால்
சிவந்த மண்ணைக் கேள்!
அந்தரத்தில் நிற்கும்
அந்தி வானைக் கேள்!
ஆர்ப்பரித்து ஒலிக்கும்
ஆழக் கடலலையைக் கேள்!
அசுரத்தனம் காட்டும்
சூறாவளியைக் கேள்!
அண்டத்தை அதிர வைக்கும்
தீப்பிழம்பைக் கேள்!
அத்தனையும் எம்மினத்தின்
அவலங்களை எடுத்துரைக்கும்.

-- **மாவிரதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கடல் வற்றிக் கருவாடு தின்னலாம் என்றெண்ணிக் குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு '

மறதியும் உறக்கமும் இறைவன் மனிதனுக்கு வழங்கிய பெருவரங்கள். தமிழருக்கு இறைவன் அவற்றைச் சற்று அதிகப்படியாகவே வழங்கிவிட்டான். அவற்றை அளவாகக் கொடுத்திருந்தால் நாங்கள் இவ்வாறு அகதிகளாக வரும் நிலைமை வந்திருக்காது. அகதிகளாக வந்த பிறகுகூட எங்களை இலண்டனில் அந்த மறதியும் உறக்கமும் கைவிடவில்லை.

இலங்கையிலே எம் உடன் பிறப்புக்கள் படும் வேதனைகள் கொஞ்ச நஞ்சமல்ல. அவற்றைப்பற்றி எமக்குத் தெரியும். தமிழனுக்கு என்று கடவுள் கொடுத்த அந்த நித்திரைகூட ஈழச் சகோதரர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. செலி எப்போது குண்டு போடவரும்: ஆமிக்காரன் எப்போது வருவான் என்ற அச்ச உணர்வுகளால் நித்திரையில்லை. உண்ண உணவில்லையே, குப்பைக் கீரையையும், மரவள்ளிக் கிழங்கையும் எத்தனை நாள் உண்பது என்ற ஏக்கத்தால் நித்திரை இல்லை. நோய்வாய்ப்பட்ட குழந்தைக்கு நோய் மாற்ற மருந்தில்லையே என்ற கவலையால் நித்திரையில்லை.

ஈழத்தமிழரின் நித்திரை மட்டும் பறிக்கப்படவில்லை. வேதனைகளை மறக்க உதவும் மறதி கூட அவர்களை விட்டுப் போய்விட்டது. அவர்கள் இப்போது எதையும் மறப்பதில்லை. வெளிநாட்டில் அகதிகளாக, ஆனால் டாம்பீகமாக வாழும் மகன்மார், மகள்மார், சோதரங்கள், கணவன்மார்கள், உறவினர்கள் ஆகியோரின் நன்றி கெட்ட செய்கைகளை மறக்க விரும்பியும் மறக்க முடியால் வேதனைப் படுகின்றார்கள். நித்தி ரையும் மறதியும் எவனுக்கு இல்லையோ அவன் முழு விசரன். துன்ப மேலீட்டினால் எமது உறவுகள் பலர் ஈழத்தில் நடமாடும் பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வெளிநாட்டில் வாழும் எம்போன்றவர்கள் இந்த அவல நிலைக்குப் பெருமளவில் காரணமாக இருக்கின்றோம்.

இதற்குக் காரணம் மறதியும் மறவியும். இலங்கைத் தமிழருக்கு மறவாமை நோயாக உள்ளது. இங்குள்ள எமக்கு மறதி நோயாக உள்ளது. உணவின்மையாலும், உடுப்பின்மையாலும் உறையுள் பறிபோனமையாலும் நோய்களாலும் நொடிகின்ற எம்தமிழருக்கு உதவவேண்டும் என்ற எண்ணம் இங்கு வாழும் எம்மவர்க்கு இல்லாமல் இல்லை. ஆனால் பிறகு செய்வோம். பின்னர் செய்வோம் எனப்பின்போடும் இந்தப் பண்பு தமிழர் மத்தியில் பல காலமாகவே இருந்து வந்துள்ளது. அதனாலேதான் "கடல் வற்றிக் கருவாடு தின்னலாம் என்றெண்ணிக் குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு" என்ற பழமொழியே உருவானது.

உதவி செய்ய விரும்புகின்ற நாங்கள் அதை இன்றே செய்துவிட வேண்டும். "நாளை என்பதும் பெயர்ந்து என்பதும் இல்லை என்பதற்கு அடையாளம்" நாளை என்பது வராமல் கூடப் போகலாம். ஆகவே இன்றே செய்யுங்கள் என்கின்றனர் நாலடி பாடிய சமணப் புலவர்கள். இப்போது சின்னப் பொடியனாக இருக்கின்றேன். இரண்டு வீடும் வாங்கி அம்பதினாயிரம் பவுணும் வங்கியிலே போட்ட பின்னர் தானதருமம் செய்வேன் என்று எண்ணுவது பிழை என்கிறது நாலடிப் பாடல். சின்ன வயதுதானே இப்போது; பெரியவனாக வந்த பின்னர் ஊருக்குப் பணம் அனுப்புவோம் என்று எண்ணாதீர்கள். முற்றிப் பழுத்த பழம் மரத்திலே உறுதியாகத் தொங்க, சின்னஞ்சிறு காய்கள் உதிர்ந்து விடுவதும் உண்டு. வாழ்க்கை நிலையற்றது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்.

'மற்றறிவாம் நல்வினை, யாம் இளையம் என்னாது கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்மின், முற்றியிருந்த கனி ஒழியத் தீவளியால் நற்காய் உதிர்தலும் உண்டு '.

பேரோடும் பொருளோடும் வாழ்கின்ற அகதிகளாகிய நாங்கள், ஐரோப்பிய பொருளாதாரப் புயலின் விளைவாகப் புலம்பெயர்க்கப்பட்டு ஈழத்திற்குத் திரும்பிப் போக வேண்டியும் வரலாம். அப்போது, ஈழத்தில் இப்போது, அவலப்படுவோர்தான் எம்மை வரவேற்க நேரிடும். அவர்களுக்கோ இப்போது மறதியில்லை. எங்களின் இப்போதைய இருதயமற்ற போக்கை அவர்கள் மறவாமல் இருப்பார்கள். இந்த நிலை நல்லதா? ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம் என்பது பொய்யாகுமா?

என்னினமே ஈழத்தமிழருக்கு உதவ அன்புக் கரம் தாருங்கள். அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. எனவே திரளுங்கள் தமிழருக்குதவ.

**- - செ. சிறீக்கந்தராசா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IAR'S SOUTH INDIAN

## TAKE AWAY

**Vegetarian - Non Vegetarian**

அன்புடையீர்!
தங்களின் ஆதரவுடன் புதிதாகத் திறந்திருக்கும் சவுத் இந்தியன் உணவகத்திற்கு
வருகை தந்து இலங்கை, இந்தியா,
மற்றும் சிங்கப்பூர் உணவுவகைகளை குறைந்த விலையில்
நிறைவாக உண்டு மகிழுங்கள். சைவ உணவு வகைகளும் கிடைக்கும்

**கல்யாணம் மற்றும் வைபவங்களுக்கு ஆர்டரின்**
**பெயரில் குறைந்த விலையில்**
**சமைத்துத் தரப்படும்**

***7 Days A Week***

**Opening Hours**
**10.00 a.m. to**
**10.00 p.m.**

**340 HIGH STREET NORTH**
**MANOR PARK**
**LONDON E12**

**Tel : (081) 471 2122**
**Fax: (081) 470 1021**

# WARAN

## REFRIGERATION & AIR CONDITIONING

Domestic & commercial Fridges
Freezer , Air conditioning and Ice Machines.

Also Electrical, Plumbing
& Central Heating works
under taken.

**ALL WORKS GUARENTEED**

**9.Ovesdon Avenue**
**Harrow**
**Middlesex**

**Call WARAN**
**On: 081 429-3122**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " நாட்டில் நடந்தவை "

## செய்திக் கோர்வை

**எமது தாயகத்தில் பிரசுரமாகும் பத்திரிகைகளில் வெளிவந்த சில உணர்ச்சி பூர்வமான பிந்திய செய்திகளை கோர்வையாக இங்கு தருகிறோம்.**

## இடம் பெயர்ந்தோர் மரங்களின் கீழ்

இராணுவ நடவடிக்கையின் காரணமாக அண்மைக் காலங்களில் இடம் பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு இடவசதி இல்லாமல் தத்தளிக்கின்றார்கள். இவர்களில் பெரும்பான்மையினர் மர நிழல்களின் கீழ் அச்சத்துடன் வாழ்ந்து வருகிறார்கள்.

உடுத்த உடையுடன் இடம் பெயர்ந்த மக்கள், மலசல கூட வசதி, குடி தண்ணீர் வசதி, மாற்ற உடை இல்லாத நிலைமை ஆகியவற்றின் நடுவே தமது குடும்பங்களையும், குழந்தைகளையும், வயோதிபர்களையும் எப்படிப் பராமரிப்பதென்று தெரியாமல் அவதிப்படுகிறார்கள்.

மரங்களின் கீழ் பனை ஓலைகளாலும், சேலைகளாலும் சுற்றி மறைவிடங்களாக்கி விட்டு தமது சொற்ப உடமைகளு டன் பச்சிளம் குழந்தைகளையும், வயோதிபர்களையும் வைத்துக் கொண்டு நாட்களைக் கழிக்கின்றனர். **--உதயன்.**

## வைத்திய சாலைகளில் சிறுவர் இறப்பு அதிகரிப்பு

வடமாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாடு தவிந்த பிரதேசங்களில் இருக்கும் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளில் பலர் மரணத்தை தழுவியுள்ளனர். இவர்களில் பெரும்பாண்மையினர் பன்னிரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆவர். இவர்கள் மலேரியா, டயரியா போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டு இறந்தவர் ஆவர்.

உணவு வசதியின்மை, நோய்நொடி, அடிப்படை சுகாதாரவசதியின்மை, போசாக்கின்மை ஆகிய காரணங்களினா லேயே பலர் இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. **--உதயன்.**

## புதிய அகதிகள் வருகை - மடு முகாமில் தடுப்பு

மன்னாரில் வரட்சி காரணமாக நீர்ப்பஞ்சம் ஏற்பட்டுள்ளதால் மடு அகதிகள் முகாமிற்கு புதிய அகதிகள் எவரையும் வரவேண்டாமென ஐ. நா. ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

மன்னாரில் பெரும் பகுதிகளில், வரட்சி காரணமாக குளங்கள் மற்றும், நீர்நிலைகளில் நீர் மட்டம் குறைந்துள்ளது. இதன் காரணமாக மடு அகதி முகாமில், குடிநீருக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதால் புதிதாக வருகின்ற அகதிகள் வருகை தடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. **--ஈழநாதம்**

## மாணவர் மேல் இராணுவம் அட்டூழியம்

கிழக்கு மாகாணத்தில் இளைஞர்கள், மாணவர்கள் இராணுவத்தினரால் துன்புறுத்தப்பட்டு வருவதாக 'கிறிஸ்ரியன் பேக்கர்' என்ற ஆங்கிலப் பத்திரிகை தெரிவித்துள்ளது. இப்பத்திரிகையின் சிறப்பு நிருபரும், சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைப் பிரதிநிதியுமான மைக்கேல் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில்: தனக்கு முன்னேயே "லான்ட் மாஸ்டரிலும்" சைக்கிளிலும் வந்த இளைஞர்களையும் பாடசாலை மாணவர்களையும் இராணுவத்தினர் துப்பாக்கி யால் அடித்து துன்புறுத்தியதாகவும் அப்பத்திரிகையில் அவர் தெரிவித்துள்ளார். **--ஈழநாதம்**

## அம்பாறை தமிழ் அகதிகள் பிச்சையெடுக்கின்றனர்

அம்பாறை மாவட்டத்தில் அகதிகள் முகாமுக்கு வெளியே தங்கி வாழும் தமிழ் மக்கள் உண்ண உணவின்றிப் பிச்சையெடுத்துச் சீவிக்கின்றனர்.

முகாமுக்கு வெளியேயிருந்த அகதிகளுக்கு அரசு வழங்கி வந்த நிவாரணம் நிறுத்தப்பட்டதன் விளைவாகவே இந்த அகதிகள் பிச்சையெடுத்து வருகின்றார்கள்.

கல்லோயா, மல்வத்தை ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து திருக்கோவில், அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளில் பெருமளவில் தங்கியிருந்த அகதிகளுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. **--ஈழநாதம்**

## அகதிகளிடம் பலவந்த இரத்தமெடுப்பு

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பிய தமிழ் அகதிகளிடம் இராணுவத்தினர் பலவந்தமாக இரத்தம் எடுத்துள்ள னர். இந்தியாவிலிருந்து திருகோணமலைக்கு கொண்டு வரப்பட்ட தமிழ் அகதிகளை உப்பு வெளியிலுள்ள சியாமளா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று, இரத்தப் பரிசோதனை செய்யும் போர்வையில், ஆண், பெண், சிறுவர் என்ற பேதமின்றி இரத்தம் எடுத்துள்ளனர். இரத்தம் கொடுக்க மறுப்பவர்களை இராணுவத்தினர் சித்திரவதை செய்து பின்பு இரத்தம் எடுக்கப் பட்டதாகவும் அங்கிருந்து வந்த பல அகதிகள் பெரும் வருத்தத்துடன் தெரிவித்த னர். **--உதயன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி பகர்கிறோம்

**"புலரும் மாலை"** கலைவிழா சிறப்புறவும், இம்மாலையின் புலர்வான **"உயிர்த்துளி"** மலர் வெளிவரவும் பலவகையிலும் எமக்கு ஒத்துழைப்புத் தந்துதவிய நல்ல உள்ளங்கள் அனைத் திற்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

அதிஸ்டலாபச் சீட்டிற்குரிய பரிசுப் பொருட்களை தந்துதவிய அன்பர்களுக்கும், சீட்டு விற்பனையில் தங்கள் பங்களிப்பைச் செவ்வனே செய்த நண்பர்களுக்கும், சீட்டுக்களை எடுத்து தாயக மக்களுக்கு கரம்கொடுக்கும் பணியில் தங்களையும் இணைத்துக் கொண்ட மக்களுக்கும் எமது நன்றிகள் என்றும் உரியன.

புலரும் மாலை சிறப்புற அமைய கலை நிகழ்ச்சிகளைத் தந்த வர்களுக்கும், ஒலி, ஒளி அமைப்பினை உளமார செய்து தந்த வர்களுக்கும் எமது நன்றிகள்.

**"உயிர்த்துளி"** மலர் வெளிவர ஆக்கங்களையும் விளம்பரங்க ளையும் தந்துதவியவர்களுக்கும், கணனியில் தட்டச்சுப் பதித்து வர்ண வேலைகள் செய்து தந்தவர்களுக்கும், பதிப்பித்த அச்ச கத்தினருக்கும் மற்றும் பல்வேறு வகைகளிலும் உளமார உதவி புரிந்த அன்பு நெஞ்சங்கள் அனைவர்க்கும் எமது இதய பூர்வ மான நன்றிகள்.

**நன்றி**

**அன்புடன்**

**புனர் வாழ்வு வழங்கக் கரம் தரும் மாணவர்**
28, Burges Road
East Ham
London E6 2BH
Tel:081-552 5095

**08-05-1993**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரன்ஸ் தமிழ்க் கடை

**For All Your Sri Lankan**

Groceries
Fresh Vegetables
Seafood

And Also For Indian & Sri Lankan

Magazines, Newspapers
Audio Cassettes, CDs

KUMARANS

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

உணவுப் பொருட்கள்
மரக்கறி வகைகள்
கடலுணவு வகைகள்
மற்றும்
இந்திய, இலங்கை பத்திரிகைகள், சஞ்சிகைகள்
ஓடியோ கசற், CD என்பனவற்றை
ஓரே இடத்தில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

# LATE NIGHT SHOP

## Walthamstow

142 Hoe Street
Walthamstow
London E17 4QR
Tel: 081 521 4955
Fax: 081 521 9482

## Central London

69 Holloway Road
Highbury & Islington
London N7 8JZ
Tel : 071 609 1912
Fax: 071 609 0501

## SRILANKAN OFF LICENCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TR TEC


Technology Training

Tel : 081 - 365 0892
081 - 365 0994

Millmead Business Centre
Mill Mead Road
London N17 9QU

## இலவச கம்ப்யூட்டர் வகுப்புக்கள் !

### Free Computer Courses




தமிழ் அகதிகள்
கல்வி வேலைவாய்ப்பு நிறுவனத்தில்
**14-06-1993 இல்**
புதிய வகுப்புகள்
ஆரம்பமாகின்றன.

## DIPLOMA IN INFORMATION TECHNOLOGY

### The Modules include

- Word Processing - (Word Perfect)
- Database - (Dbase III+)
- Spreadsheet - (Lotus 123)
- Computers & Information Technology
- Programming - (Pascal & Basic)

**Leading to :-**

**City & Guilds (C&G) 726 & RSA Certificate**

**தொடர்புகட்கு:-**

Millmead Business Centre , Mill Mead Road, London N17
Tel: 081 - 365 0892 or 081 - 801 3822

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பு செல்வம் அச்சகம் (இலண்டன்) Tel : 081 - 478 6766